செ.வெ.எண்:. 385 நாள்:- 12.05.2010

உயர் கல்வித்துறை

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று (12.5.2010) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள புதிய சட்டப்பேரவை தலைமைச் செயலக வளாகத்திலுள்ள முதலமைச்சர் அறையில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளை ஒருமை வகை பல்கலைக்கழகங்களாக (UNITARY UNIVERSITY) மாற்றுவது குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் அளித்தார். மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திரு.க.கணேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வின்போது, இக்குழுவின் உறுப்பினர்களான மாநில திட்டக்குழு துணைத் தலைவர் முனைவர் எம்.நாகநாதன், அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எம்.அனந்தகிருஷ்ணன், பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் பி.ஜெகதீசன், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் உறுப்பினர் செயலர் முனைவர் எஸ்.பாஸ்கரன் ஆகியோர் உடனிருந்தனர்.

குழுவின் அறிக்கை தமிழக அரசின் இணைய தளத்தில் www.tn.gov.in–ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மீது கருத்து தெரிவிக்க விரும்புபவர்கள், 10 தினங்களுக்குள் முதன்மைச் செயலாளர், உயர்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009–க்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/XXX
(க.கணேசன்)
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

(வே.கோவிந்தசாமி)
(அரசு துணைச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.